**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.200/2025</u>**

**<u>நாள் : 02.07.2026</u>**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பர்வீன்குமார் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.ஏகாம்பரம் | வயது | : | 41 |
| ஊர் | | பாச்சல் | தொழில் | : | |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**<u>முதல் விசாரணை</u>**

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. பிரேத பரிசோதனை அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. TN 23 N 1865 என்ற அரசு பேருந்தின் பதிவு புத்தகம் நகல் – ம.சா.ஆ.3

4. 1 ஆம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.4

5. 2 ஆம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.5

6. 3 ஆம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.6

7. 1 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் – ம.சா.ஆ.7

8. 2 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் – ம.சா.ஆ.8

9. 3 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் –ம.சா.ஆ.9

10. வாரிசு உரிமை சான்றிதழ் நகல் –ம.சா.ஆ.10

11. TN 23 N 1865 என்ற அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் –ம.சா.ஆ.11

12. இறந்த ஏகாம்பரத்தின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.12

13. இறந்த ஏகாம்பரத்தின் இறப்பு சான்றிதழ் நகல் – ம.சா.ஆ.13

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் TN 83 S 7340 என்ற இருசக்கர வாகனத்தை என் அப்பா ஓட்டி செல்ல என் அம்மா பின்னால் அமர்ந்து திருப்பத்தூரில் இருந்து ஜோலார்பேட்டை நோக்கி சென்ற போது டான் பாஸ்கோ பள்ளியை அடுத்து நாக கல்யாண மண்டபம் அரசு பேருந்து வாணியம்பாடியில் இருந்து திருப்பத்தூர் நோக்கி வந்த போது எதிரில் விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் சாலை பணிகள் நடைபெற்று வந்ததால் இரு சாலை வாகனங்களும் ஒரே சாலையில் சென்று வந்தன என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அவரிடம் இருந்தது. ஆனால் அணிந்திருந்தாரா என்று தெரியவில்லை. தலைக்கவசம் அணிந்திருந்தால் உயிர் பலியை தடுத்திருக்கலாம் என்றால் தெரியவில்லை. அவர் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அவரிடம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. வாகனத்தை ஓட்டத்தெரியாமல் ஓட்டி பேருந்தின் வலது பக்கத்தில் மோதி அவரே விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. என் அப்பா ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் என் பெயரில் பதிவு செய்யப்பட்டு காப்பீடு உள்ளது. இம்மனுவில் என்னையும், எனது காப்பீட்டு நிறுவனத்தையும் எதிர்மனுதாரர்களாக சேர்க்காததால் மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. பவித்ரா என்னுடைய தங்கை, வினோத்குமார் என்னுடைய தம்பி, நான் உட்பட மூவருக்கும் என் அப்பா இருக்கும் போதே திருமணம் ஆகிவிட்டது. அதனால் எங்கள் மூவருக்கும் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் ஏற்பட்டுள்ளது. மாதம் ரூ.15,000/– அளவிற்கு சம்பாதித்து வந்தார். அவர் சம்பாதித்ததை எங்களுக்கு கொடுத்து வந்ததால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. தச்சு வேலை செய்து வந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள நஷ்டஈடு மிக அதிகம் என்றும், மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.